பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**25 02 2026** **7 15**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று இஸ்ரேல் செல்கிறார்.

2. குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, மகாராஷ்டிராவில் ஆயுஷ் அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ள தேசிய ஆரோக்கிய திருவிழாவை இன்று தொடங்கி வைக்கிறார்.

3. விவசாயிகளின் வாழ்வை மேம்படுத்தவும் வேளாண்துறை வளர்ச்சிக்கும் மத்திய-மாநில அரசுகளுக்கு இடையே வலுவான ஒருங்கிணைப்பு அவசியம் என்று மத்திய அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

4. தொழிலாளர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்த மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து செயல்படுவதாக மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

5. நாட்டின் அடுத்த தொழிற்புரட்சியில் உயிரி தொழில் நுட்பம் முக்கிய பங்கு வகிக்கும் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று இஸ்ரேல் செல்கிறார்.

அந்நாட்டுப் பிரதமர் திரு. பெஞ்சமின் நெதன்யாகு அழைப்பின்பேரில் அங்கு செல்லும் திரு. நரேந்திர மோடி இருதரப்பு உறவுகள் குறித்து அவருடன் விரிவாக ஆலோசனை நடத்த உள்ளார்.

அறிவியல், தொழில்நுட்பம், பாதுகாப்பு, வேளாண்மை, நீர் மேலாண்மை உள்ளிட்டவற்றில் இரு நாடுகளுக்குமிடையே ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து இரு தலைவர்களும் பேச்சு நடத்த உள்ளனர்.

பரஸ்பர நலன் சார்ந்த மண்டல மற்றும் உலகளாவிய விவகாரங்கள் குறித்தும் அவர்கள் ஆலோசனை மேற்கொள்ள உள்ளனர்.

இஸ்ரேல் அதிபர் திரு. **Isaac Herzog**-ஐயும் திரு. நரேந்திர மோடி சந்தித்துப் பேச உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, மகாராஷ்டிர மாநிலம் புல்தானாவில் ஆயுஷ் அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ள தேசிய ஆரோக்கிய திருவிழாவை இன்று தொடங்கி வைக்கிறார்.

நான்கு நாட்கள் நடைபெறும் இந்த விழாவில் ஆயுர்வேதம், சித்தா, யோகா, யுனானி, ஹோமியோபதி உள்ளிட்ட மருத்துவ முறைகளில் இலவச ஆலோசனைகள், பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகள் வழங்கப்பட உள்ளன.

ஆயுஷ் மருத்துவ முறைகள் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டு இந்த விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் யோகா செயல்முறை விளக்கங்கள் மற்றும் மருத்துவ கண்காட்சிகளும் இடம்பெற உள்ளன.

இதன் ஒரு பகுதியாக மூலிகைத் தாவரங்களை சாகுபடி செய்து சந்தைப்படுத்துவது குறித்த விவசாயிகளுக்கான சிறப்பு அமர்வுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் மகாராஷ்டிரா மற்றும் அண்டை மாநிலங்களைச் சேர்ந்த பொதுமக்கள் பெரிய அளவில் பங்கேற்று இதனைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு மத்திய ஆயுஷ் அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<>>>>

நடப்பு நிதியாண்டில் விவசாயிகள் நலனுக்காக ஒதுக்கப்பட்ட மத்திய நிதியை மாநிலங்கள், மார்ச் 31-ம் தேதிக்குள் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும் என்று மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் கேட்டுக்கொண்டுள்ளார்.

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் தொடர்பான ஆய்வுக் கூட்டம் புதுதில்லியில் காணொலி மூலம் நேற்று நடைபெற்றது.

அசாம், பீகார், குஜராத், மத்தியப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களின் வேளாண் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.

இதில் பேசிய திரு சிவராஜ் சிங் சௌகான், அரசின் நலத்திட்டங்களின் பலன்கள் விவசாயிகளைச் சென்றடைவதை உறுதி செய்ய மத்திய நிதி உரிய நேரத்தில், திறன் வாய்ந்த முறையில் பயன்படுத்தப்பட வேண்டியது அவசியம் என்றார்.

பருப்பு, கடுகு மற்றும் பயறு வகைகளை மேலும் அதிக அளவில் கொள்முதல் செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

விவசாயிகளின் வாழ்வை மேம்படுத்தவும் வேளாண் துறை மேம்பாட்டுக்கும் மத்திய-மாநில அரசுகளுக்கு இடையே வலுவான

ஒருங்கிணைப்பு அவசியம் என்று திரு. சிவராஜ் சிங் சௌகான் கூறினார்.

<<<<>>>>

தொழிலாளர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்த மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து செயல்படுவதாக மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகத்தின் 75வது ஆண்டு விழாவையொட்டி புதுதில்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் பங்கேற்றார்.

தொழிலாளர்களுக்கான மருத்துவ முகாமையும் அமைச்சர் தொடங்கி வைத்தார்.

தொழிலாளர்களுக்கான சுகாதாரப் பாதுகாப்பை வழங்குவதில் தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகம் உலகிற்கே முன்மாதிரியாக திகழ்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

புதிய தொழிலாளர் சட்டங்களில் தொழிலாளர்களின் உடல் நலனுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

40 வயதுக்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வருடாந்திர மருத்துவப் பரிசோதனை கட்டாயமாக்கப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட தொழிலாளர்களின் நலன் மிக முக்கியமானது என்பதை கருத்தில் கொண்டு அரசு செயல்பட்டு வருவதாக திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டில் கடந்த 11 ஆண்டுகளில் ரயில்வே கட்டமைப்பு பெருமளவு மேம்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம் வழியாக செல்லும் இரண்டு ரயில் சேவைகளை காணொலி காட்சி வாயிலாக நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

புதிதாக தொடங்கப்பட்டுள்ள ரயில் சேவைகள் மத்தியப்பிரதேசம், உத்தரப்பிரதேசம் மற்றும் ஜார்கண்ட் மாநில மக்களுக்கு பயனளிக்கும் என்று அவர் கூறினார்.

கடந்த சில ஆண்டுகளில் மத்தியப்பிரதேச மாநிலத்தில் ரயில் கட்டமைப்புகளை மேம்படுத்தவும், புதிய ரயில் சேவைகளுக்காகவும் 48 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதக திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டின் அடுத்த தொழிற்புரட்சியில் உயிரி தொழில் நுட்பம் முக்கிய பங்கு வகிக்கும் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற உயிரி தொழில்நுட்பத் துறையின் 40வது ஆண்டு நிறுவன தின கொண்டாட்டங்களில் கலந்துகொண்டு பேசிய அவர், 2047ஆம் ஆண்டுக்குள் நாட்டின் உயிரிப் பொருளாதாரம் ஒரு ட்ரில்லியன் டாலரை எட்டும் என்று கூறினார்.

எதிர்கால வளர்ச்சியின் முக்கிய தூணாக உயிரி தொழில்நுட்பத்துறை திகழ்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட டிஜிட்டல் அம்சங்களுடன் உயிரி தொழில்நுட்பத்தை ஒருங்கிணைப்பது, செயல்திறனை அதிகரிக்கும் என்று அவர் கூறினார்.

2014ஆம் ஆண்டில் உயிரி தொழில்நுட்பம் தொடர்பான புத்தொழில் நிறுவனங்கள் 100க்கும் குறைவாகவே இருந்தது என்றும், தற்போது அது 11 ஆயிரத்தை தாண்டியுள்ளது என்றும் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

கிராமப்புறங்களில் வங்கி மற்றும் காப்பீட்டு சேவைகளை வலுபடுத்துவதில் அஞ்சலக ஊழியர்கள் முக்கியப் பங்காற்றுவதாக மத்திய தொலைதொடர்புத்துறை அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

போபாலில் நேற்று நடைபெற்ற கிராமப்புற அஞ்சல் ஊழியர்கள் மாநாட்டில் பேசிய அவர், அஞ்சல் துறையில் பெரிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறினார்.

சீர்திருத்தம், செயல்திறன், மாற்றம் என்ற பிரதமர் திரு. நரேந்திர மோடியின் கொள்கைக்கு ஏற்ப இத்துறை நவீனமயமாக்கப்பட்டு வருவதாக திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்தார்.

<<<<>>>>

ஆந்திராவில் முந்தைய ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் ஆட்சியில் திருப்பதி லட்டு தயாரிப்பில் 60 லட்சம் கிலோ கலப்பட நெய் பயன்படுத்தப்பட்டதாக அம்மாநில முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு குற்றம் சாட்டியுள்ளார்.

சட்டப்பேரவையில் இதனைத் தெரிவித்த அவர், லட்டு தயாரிப்புக்காக நெய் வாங்கியதில் பெரிய அளவில் முறைகேடுகள் நடைபெற்றிருப்பது தெரியவந்துள்ளதாகவும் கூறினார்.

<<<<>>>>

சத்தீஸ்கடில் வரும் நிதியாண்டில் மக்கள் நலனுக்காக 12 புதிய திட்டங்கள் தொடங்கப்படும் என்று அம்மாநில நிதியமைச்சர் திரு. ஓ.பி. சௌத்ரி கூறியுள்ளார்.

சட்டப்பேரவையில் நேற்று பட்ஜெட்டை தாக்கல் செய்து பேசிய அவர், வரும் நிதியாண்டுக்கான மொத்த செலவு ஒரு லட்சத்து 70 ஆயிரம் கோடி ரூபாயாக இருக்கும் என்று அவர் கூறினார்.

செயற்கை நுண்ணறிவு, சுற்றுலா மேம்பாடு, புத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி ஆகியவை தொடர்பாக புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

மார்ச் 31ஆம் தேதிக்குள் பஸ்தர் பகுதியில் இருந்து நக்சல் தீவிரவாதம் முற்றிலும் ஒழிக்கப்படும் என்றும், இப்பகுதியின் வளர்ச்சிக்காக சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாகவும் திரு. ஓ.பி. சௌத்ரி கூறினார்.

<<<<>>>>

தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. கியானேஷ் குமார் தலைமையிலான குழு இன்று முதல் 3 நாட்கள் புதுச்சேரி மற்றும் தமிழகத்தில் பயணம் மேற்கொள்கிறது.

இன்று புதுச்சேரியில் சட்டப்பேரவை தேர்தல் தொடர்பாக அக்குழுவினர் ஆலோசனை மேற்கொள்ள உள்ளனர்.

நாளை சென்னையில் தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரியுடனும், நாளை மறுநாள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுடனும் தேர்தல் ஆணையத்தின் குழு ஆலோசனை மேற்கொள்ள உள்ளது.

<<<<>>>>

ரஷ்யாவுக்கும் யுக்ரைனுக்கும் இடையே உடனடியாக முழு போர் நிறுத்தத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற தீர்மானம் ஐ.நா-வில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**193** உறுப்பினர்களைக் கொண்ட ஐநா பொதுச் சபையால் இந்த வரைவுத் தீர்மானத்துக்கு ஆதரவாக **107** நாடுகளும் எதிராக, **12** நாடுகளும் வாக்களித்தன.

அமெரிக்கா மற்றும் யுக்ரைனுடன் இணைந்து, பஹ்ரைன், பங்களாதேஷ், பிரேசில், சீனா, தென்னாப்பிரிக்கா, இலங்கை, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகள் இந்த தீர்மானத்தைக் கொண்டு வந்தன.

இந்தியா உள்ளிட்ட **51** நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

<<<<>>>>

ஐ.எஸ்.எல் கால்பந்து போட்டியில் ஒடிசா - இன்டர் காசி அணிகளுக்கு இடையே நேற்று நடைபெற்ற ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

-------------

**Prague** சர்வதேச செஸ் போட்டி செக் குடியரசில் இன்று தொடங்குகிறது.

இதில் இந்தியாவின் குகேஷ் பங்கேற்கிறார்.

-------------

உலகக் கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் இங்கிலாந்து அணி - பாகிஸ்தான் அணியை வென்றது.

கொழும்பில் நடைபெற்ற இப்போட்டியில் **2** விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்து வெற்றி பெற்றது.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் இலங்கை அணி - நியூசிலாந்தை எதிர்கொள்கிறது.

**<<<<The End>>>>**